# எச்ஐவி யும் போதைப்பொருள் பயன்படுத்துதலும் (DRUG USE AND HIV)



**எச்ஐவி யுடன் போதைப்பொருள் பயன்படுத்துதல் எப்படி தொடர்புள்ளது?**

போதைப்பொருள் பயன்படுத்துதல் எச்ஐவி பரவுவதற்கு ஒரு முக்கியமான காரணமாக இருக்கிறது. போதை ஏற்றிக்கொள்வதற்கு பயன்படுத்தும் உபகரனங்களை பகிர்ந்து கொள்ளுதல் மூலம் எச்ஐவி மற்றும் ஹெபடைடிஸ் போன்ற நோய்கள் பரவுகிறது. மேலும் பாதுகாப்பற்ற உடலுறவுக்கு வழிவகுக்கிறது.

எஆர்வி சிகிச்சை எடுப்பவர்கள் போதைப்பொருள் மற்றும் மது பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானது. போதைப்பொருள் பயன்படுத்துவோர் (கெமிக்கல் சார்ந்த) சிகிச்சையினை குறைவாகவே எடுத்துக் கொள்கின்றனர். தெருக்களில் விற்க்கப்படும் போதைப்பொருள் எஆர்வி சிகிச்சையில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் எச்ஐவி மற்றும் தனிநபர் போதைப்பொருள்கள் பற்றி அத்தியாயம் 494 ல் அறியலாம்.

**ஊசி ஏற்றிக்கொள்ளுதல் மற்றும் தொற்றுக்கள்**

போதைப்பொருள்களை உடம்பில் ஏற்றிக்கொள்ளும் உபகரணங்களை பகிர்ந்து கொள்ளுதல் மூலம் எச்ஐவி சுலபமாக பரவுகிறது. மேலும் இந்த உபகரணங்களை பகிர்ந்து கொள்வதால் ஹெபடைடிஸ் பி & சி மற்றும் தீவிர இரத்த சம்மந்தமான நோய்களும் பரவுகிறது.

போதைப்பொருள் ஏற்றிக்கொள்ள பயன்படுத்தும் உபகரணங்களில் (ஊசி மற்றும் சிரிஞ்சுகள்) தொற்றுள்ள இரத்தம் அல்லது சீரம் எடுத்தபிறகு அதனை மற்றொருவர் போதைப்பொருள் ஏற்றி உடம்பில் செலுத்திக் கொள்வதன் மூலம் எச்ஐவி சுலபமாக பரவுகிறது. போதைப்பொருள் பயன்படுத்துதலில் இதன் மூலம் எச்ஐவி சுலபமாக பரவுகிறது. ஏனெனில் தொற்றுள்ள இரத்தம் இன்னொருவருடைய இரத்த சீரத்தில் நேரடியாக கலக்கிறது (இதில் பரவும் விகிதம் 95 % ற்கும் அதிகமாகும்).

உங்கள் கையிலோ, பாத்திரத்திலோ, வடிகட்டியிலோ, இருக்கிகட்ட பயன்படுத்தும் பொருளிலோ, பிற போதைப்பொருள் கலந்த பானம் தயாரிப்பதற்க்கு பயன்படுத்திய குப்பியிலோ (போதைப்பொருள் பயன்படுத்துவோர் சில சமயம் பலதரப்பட்ட ஊசி ஏற்றக்கூடிய பொருள்களை ஒரு குப்பியில் கலக்குவார்கள்) அல்லது கலக்கும் தண்ணீரிலோ சிறிய அளவிளான இரத்தம் இருப்பது போதைப்பொருள் பயன்படுத்தும் பிறருக்கு தொற்று ஏற்படுத்த போதுமானது.

எச்ஐவி மற்றும் ஹெபடைடிஸ் போன்ற தொற்றுக்கள் ஏற்படுவதை குறைக்க ஒருபோதும் போதை மருந்தை செலுத்த பயன்படுத்தும் உபகரனங்களை பகிர்ந்து கொள்ள கூடாது. மேலும் கைகளை எப்பொழுதும் கழுவுவதை வழக்கமாக கொள்ளவேண்டும். போதைப்பொருள் ஏற்ற பயன்படுத்தும் இடம் மற்றும் பாத்திரங்களை கவனமாக சுத்தம் செய்ய வேண்டும். போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்தினை குறைப்பதற்கான வழிமுறைகள் பற்றிய தகவல்களுக்கு அத்தியாயம் 155 ஐ பார்க்கவும்).

உபகரணங்களை மறுபடியும் பயப்படுத்த நினைத்தால் ஒவ்வொரு பயன்பாட்டிற்க்கு பிறகும் அதை முழுமையாக சுத்தம் செய்வதால் தொற்று ஏற்படும் ஆபத்தினை குறைக்கலாம். முடிந்தால் நீங்கள் பயன்படுத்திய ஊசிகளை மீண்டும் பயன்படுத்தலாம். இருந்தாலும் அதை சுத்தம் செய்யவேண்டும் ஏனெனில் அதில் பாக்டீரியா வளரலாம்.

போதைப்பொருளுக்கு பயன்படுத்தும் சிரிஞ்சுகளை சுத்தம் செய்ய மிகச்சிறந்த வழி அதனை முதலில் சாதாரண நீரை கொண்டு சுத்தம் செய்யவேண்டும், பிறகு நன்கு கழுவ வேண்டும், கடைசியாக சுத்தமான நீரைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். சிரிஞ்சுகளில் உள்ள இரத்தத்தை முழுமையாக வெளியேற்ற முப்பது விநாடிகள் பலமாக குழுக்க வேண்டும். கழுவும் போது குளிர்ந்த நீரையே பயன்படுத்த வேண்டும் ஏனெனில் வெந்நீர் உபயோகிக்கும் போது இரத்தம் உறைந்து படிவதற்க்கு வாய்ப்புள்ளது. சிரிஞ்சுகளில் உள்ள அதிகமான எச்ஐவி மற்றும் ஹெபடைடிஸ் சி வைரஸ்களை கொள்வதற்கு இரண்டு முழு நிமிடம் சுத்தம் செய்ய வேண்டும். சுத்தம் செய்வதால் எச்ஐவி மற்றும் ஹெபடைடிஸ் கிருமிகளை கொல்ல முடியாது. முடிந்தால் புதிய சிரிஞ்சுகளை பயன்படுத்த வேண்டும்.

**ஊசி / சிரிஞ்சுகள் பரிமாற்றல் திட்டம்**

இந்தியாவில் சில மாநிலங்களில் உள்ள சேவை செய்யும் நிறுவனங்கள் அரசாங்க அல்லது வெளியிலிருந்து பண உதவியுடன் ஊசிகள் மற்றும் சிரிஞ்சுகள் பரிமாற்ற திட்டத்தை போதைப்பொருள் பயன்படுத்துவோர்களிடையே ஊசி மற்றும் சிரிஞ்சுகள் பகிர்ந்து கொள்வதை தடுப்பதற்காக செயல்படுத்தி வருகின்றனர். அங்கு அவர்களுக்கு பயன்படுத்திய ஊசிகள் மற்றும் சிரிஞ்சுகளுக்கு பதிலாக ஒன்று அல்லது இரண்டு புதிய ஊசிகள் மற்றும் சிரிஞ்சுகள் முழுவதும் இலவசமாக வழங்கப்படுகிறது. அபாயத்தை குறைக்கும் நடவடிக்கைகளில் உள்ள சமுக பணியாளர்கள் வழக்கமாக போதை ஊசிகள் ஏற்றிக்கொள்ளும் பகுதிகளுக்கு சென்று அங்கு பயன்படுத்திய ஊசிகள் மற்றும் சிரிஞ்சுகளை போதைமருந்து பயன்படுத்துவோரிடமிருந்து சேகரித்து அதற்க்குப் பதிலாக புதிய ஊசி மற்றும் சிரிஞ்சுகளை வழங்கி வருகின்றனர். இத்திட்டத்தில் நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன ஏனெனில் இது போதை ஊசி பழக்கத்தை தூண்டுவதாக நினைக்கின்றனர். ஆயினும் ஊசிகள் பரிமாற்றத்தில் பல ஆராய்ச்சிகள் இது உண்மையில்லை என்று கூறுகின்றன.

உலகம் முழுவதும் நடத்தப்பட்ட பிற ஆராய்ச்சிகளில் ஊசிகள் பரிமாற்றம் திட்டத்தை செயல்படுத்தி வரும் நகரங்களில் போதைப்பொருள் பயன்படுத்துவோர் மத்தியில் எச்ஐவி பரவும் விகிதம் குறைந்தும் அல்லது நிலையாக உள்ளது எனவும் இத்திட்டத்தை நடத்தாத நகரங்களில் எச்ஐவி தொற்று அதிகரித்துக்கொண்டே வருவதாகவும் கூறுகின்றன. மேலும் இது இந்நகரங்களில் போதை ஊசியைப் பயன்படுத்துவோர் சிகிச்சையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கிறது.

**போதைப்பொருள் பயன்படுத்துதலும் பாதுகாப்பற்ற உடலுறவும்**

அதிகமான மக்கள் போதைப்பழக்கத்தையும் உடலுறவையும் ஒன்றாகவே அனுபவிக்கின்றனர். போதைப்பொருள் பயன்படுத்துவோர் போதைப்பொருள் அல்லது அதை வாங்கும் பணத்திற்காகவும் பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார்கள். சில மக்கள் போதைப்பொருள் பயன்படுத்தும் போது பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடுகிறார்கள்.

போதைபழக்கத்தில் மீதம்பீடமைன் (Methamphetamine) அல்லது ஆல்கஹால் உட்கொள்வதால் உடலுறவில் ஈடுபடும் போது தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை அதிகரிக்கிறது. போதைப்பொருளுக்காக பாலியல் தொழிலில் ஈடுபடும் சிலபேர் அவர்கள் எப்படி கட்டுக்கோப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வதற்க்கு சிரமமானதாகிறது. போதைப்பொருள் பயன்படுத்துவது ஒருவருக்கு காண்டம் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான உடலுறவுகள் மேற்கொள்வதை குறைக்கிறது.

அடிக்கடி போதைப்பொருள்களை பயன்படுத்துவோர் பல நபர்களுடன் உடலுறவு வைத்துக்கொள்கிறார்கள். இது எச்ஐவி அல்லது பிற பால்வினை நோய் தொற்றுக்களால் பாதிக்கப்படுவதற்க்கான வாய்பை அதிகரிக்கிறது. மேலும் போதைப்பொருள் பயன்படுத்துவோருக்கு பால்வினை நோய்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இது எச்ஐவி தொற்றால் பாதிக்கப்படுவதற்கு அல்லது எச்ஐவி தொற்றை பரப்புவதற்கு அதிக வாய்ப்பாகிறது.

சில ஆண்கள் உடலுறவு கொள்ளும் பொழுது போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தால் அது விந்துவை தாமதமாக வெளியேற்றும் என்று தவறாக நினைக்கின்றனர். இதனால் போதைப்பொருள் பழக்கத்தை உடலுறவின் போது அதிகப்படுத்துகிறது. குறிப்பாக பணம் கொடுத்து உடலுறவு கொள்ளும் பொழுது இது அதிகம் நிகழும்.

**போதைப்பொருளும் சிகிச்சையும்**

ஏஆர்வி சிகிச்சையில் ஒவ்வொரு மாத்திரையையும் எடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானதாகிறது. அவ்வாறு எடுத்துக் கொள்ளவில்லையென்றால் இரத்தத்தில் எச்ஐவி கிருமியின் அளவு அதிகரித்துவிடும் அத்தோடு வைரஸ் கிருமி ஏஆர்வி மருந்திற்கு எதிராக செயல்படும் நிலையை அதிகரித்துவிடும். மணிப்பூர் மற்றும் வடகிழக்கு இந்திய பகுதிகளில் உள்ள போதைஊசி பயன்படுத்துவோருக்கு புதிய வகை எச்ஐவி (Thai - B) இருப்பதாக கூறப்படுகிறது. போதைஊசி பழக்கம் தொடர்ந்து சரியாக மாத்திரை எடுப்பதை தடுப்பதோடு சிகிச்சையை தோல்வியடையச் செய்துவிடுகிறது.

தெருக்களில் விற்கும் ஒரு சில போதைப்பொருள்கள் மருத்துவ சிகிச்சை யினை பாதிக்கும். எச்ஐவி யை எதிர்ப்பதற்க்கு பயன்படுத்தும் மருந்துகள் முக்கியமாக புரோடியஸ் இன்கிபிட்டார்ஸ் (Protease Inhibitors) மற்றும் நான்-நியூகிலோசைட் ரிவர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ் இன்கிபிட்டார்ஸ் (non-nucleoside reverse transcriptase inhibitors) மருந்துகளால் கல்லீரல் பாதிப்படையும். மேலும் இதனால் பொழுதுபோக்கிற்காக பயன்படுத்தும் போதைப்பொருள்களும் (ஆல்கஹாலும் அடங்கும்) செயழிலக்கிறது. போதைப்பொருளும் மருத்துவ சிகிச்சையும் கல்லீரல் மூலமே செயல்படுகிறது. எனவே இவை இரண்டையும் ஒரே நேரத்தில் பயன்படுத்தும் போது கல்லீரல் மிகவும் மெதுவாகவே செயல்படுகிறது. இது அளவுக்கதிகமான மருந்தையும் அல்லது போதைப்பொருளையும் எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பாகிறது.

அதிகப்படியான மருந்துகளை எடுத்துக்கொள்ளுதல் ஆபத்தான பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது. சட்டத்துக்கு விரோதமான போதைப்பொருள்களை பயன்படுத்தும் போது, அது சுத்தம் இல்லாமலும், அதிக அளவும் இருப்பதால் அல்லது போதைப்பொருள் எடுக்காமல் இருந்து தற்பொழுது எடுக்கும் போதும் அதிக அளவு எடுத்துக்கொள்வதை தூண்டும். பொழுதுபோக்கிற்காக அதிக அளவில் எடுத்துக்கொள்ளப்படும் போதைப்பொருள்கள் உயிரிழப்பை ஏற்படுத்தும். குறைந்தபட்சம் எச்ஐவி யால் ஏற்படும் ஒரு உயிர் இழப்பாவது புரோடியஸ் இன்கிபிட்டார்ஸ் (Protease Inhibitors) மற்றும் பொழுதுபோக்கிற்காக அதிக அளவில் எடுத்துக்கொள்ளும் போதைப்பொருள்கள் இரண்டையும் சேர்த்து எடுப்பதால் நிகழ்வதாக கூறுகிறார்கள்.

**அடிப்படை வரையறைகள்**

போதைஊசி பழக்கம் புதிய எச்ஐவி தொற்று ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். போதைஊசி உபகரணங்களை பகிர்ந்து கொள்வதால் எச்ஐவி, ஹெபடைடிஸ் மற்றும் பிற நோய்கள் பரவுகிறது. பொழுதுபோக்கிற்காக பயன்படுத்தும் ஆல்கஹால் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்துவதும் பாதுகாப்பற்ற உடலுறவு ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.

உங்களை தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் ஒருபோதும் போதைஊசிகளுக்கு பயன்படுத்தும் உபகரணங்களை பகிர்ந்து கொள்ளக்கூடாது. நீங்கள் பயன்படுத்திய ஊசியை மீண்டும் பயன்படுத்தினால் ஒவ்வொரு பயன்பாட்டிற்கு பின்னரும் அதை முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும். சுத்தம் செய்வது ஒருஅளவிற்கே பயனளிக்கும்.

சில மாநிலங்களில் ஊசிகள் பரிமாற்றம் திட்டத்தின் மூலம் சிரிஞ்சுகளை புதிதாகவும் இலவசமாகவும் வழங்கி வருகின்றனர். இத்திட்டத்தின் மூலம் புதிதாக ஏற்படும் எச்ஐவி தொற்று குறைந்துள்ளது.

போதைப்பொருள் பயன்படுத்துதல் எஆர்வி மாத்திரைகளை தவறவிடுவதற்கு வழிவகுக்கும். இது சிகிச்சையை தோல்வியுறச் செய்வதோடு மருந்திற்க்கு எதிராக எச்ஐவி வைரஸ் செயல்படுவதற்கு வாய்ப்பாகிறது.

பொழுது போக்கிற்காக பயன்படுத்தும் போதைப்பொருட்களும் ஏஆர்வி மருந்துகளும் சேர்ந்து எடுப்பது ஆபத்தானது. இதனால் மோசமான பக்கவிளைவுகளும் அல்லது அளவுக்கதிகமான மருந்துகளை எடுத்துக்கொள்வதற்கும் காரணமாகிறது.